பொதுப்பணித்துறை ₹23 கோடியில் கட்டிய

சென்னை மண்டல தலைமை பொறியாளர் அலுவலக கட்டிடம்

▶ சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில், பொதுப்பணித் துறை மண்டல தலைமை பொறியாளர் அலுவலக கட்டிடத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். அருகில், அமைச்சர் எ.வ.வேலு, துறை செயலாளர் சந்தரமோகன், முதன்மை தலைமை பொறியாளர் சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமை பொறியாளர் ஆயிரத்தரசு ராஜசேகரன்.

சென்னை, பிப்.3: பொதுப்பணித்துறையால் ₹23 கோடியில் கட்டப்பட சென்னை மண்டல தலைமைப்பொறியாளர் அலுவலக கட்டிடத்தை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

பொதுப்பணித்துறையில் முதன்மை தலைமைப் பொறியாளர் அலுவலகமும், சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகமும் ஒரே கட்டிடத்தில் செயல்பட்டு வந்தன. சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் அலுவலகத்திற்கு போதிய இடவசதி இல்லாததால், தனியாக கட்டிடம் கட்ட ஆலோசிக்கப்பட்டது. தலைமை பொறியாளர் (கட்டிடம்) சென்னை மண்டலத்திற்கான புதிய அலுவலக கட்டிடம் ₹23.05 கோடியில் கட்டப்பட்டுள்ளது. இது மூன்று தளங்களுடன் 1,04,049 சதுர அடியில் கட்டப்பட்டுள்ளது.

முதல் தளத்தில் தலைமைப் பொறியாளர் அறை மற்றும் அலுவலகங்கள், கோட்டப் பொறியாளர் அலுவலகங்களும், இரண்டாம் தளத்தில் தலைமை கட்டிடக் கலைஞர் அறை மற்றும் அலுவலகங்கள், நூலகம் மற்றும் கலந்தாய்வுக் கூடமும், மூன்றாம் தளத்தில் கண்காணிப்புப் பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அறை மற்றும் அலுவலகங்கள், கூட்ட அரங்கு மற்றும் பிற கட்டிட கட்டுமான உப கோட்டம் அலுவலகங்கள் செயல்படவுள்ளது.

சென்னை, தரமணி, பொதுப்பணித்துறை வளாகத்தில் ₹35லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள நுழைவாயில், பொதுப்பணித்துறை வளாகத்தில் ₹70 லட்சத்தில் கட்டப்பட்டுள்ள மகளிருக்கான உணவுக் கூடம் உள்ளிட்டவற்றை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். 40 வகையான சிவில் உபகரணங்கள் மற்றும் 8 வகையான மின் உபகரணங்கள் ₹6.80 கோடியில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் கட்டுமானப் பொருட்களின் 45 வகையான பண்புகளை கண்டறிந்து தரத்தை உறுதி செய்ய முடியும். மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து தரக்கட்டுப்பாட்டு கோட்டங்களின் பயன்பாட்டிற்காக ஆய்வக உபகரணங்களை அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின், எ.வ.வேலு ஆகியோர் தரக்கட்டுப்பாட்டு பொறியாளர்களிடம் வழங்கினர். நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயலாளர் சந்தரமோகன், பொதுப்பணித்துறை முதன்மை தலைமைப் பொறியாளர் சத்தியமூர்த்தி, சென்னை மண்டல தலைமை பொறியாளர் ஆயிரத்தரசு ராஜசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பொதுப்பணித்துறையால் மேற்கொள்ளப்படும் அலுவலக கட்டிடங்கள், அரசு மருத்துவமனைகள், அரசுப் பள்ளிகள், விளையாட்டு திடல்கள், நினைவகங்கள் போன்ற அரசு கட்டிட பணிகள் முதலியவற்றை இத்துறையின் மூலம் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் மின்னணு திரை மூலம் காட்சிப்படுத்தப்படுகிறது.

அமைச்சர் உதயநிதி திறந்து வைத்தார்

▶ பொதுப்பணித்துறை அலுவலக கட்டிடம்.

பட்ஜெட்டில் கைவிரித்த பாசிஸ்ட்டுகளை

இனி எக்காலத்துக்கும் எழ முடியாத அளவுக்கு மக்கள் வீழ்த்துவது உறுதி

திமுக இளைஞர் அணி செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் தனது சமூக வலைத்தள பதிவில் கூறியிருப்பதாவது:ஒன்றிய அரசின் இடைக்கால பட்ஜெட்டில் மீண்டும் தமிழ் நாட்டை பாசிஸ்ட்டுகள் புறக்கணித்திருக்கிறார்கள். எவ்வளவு மரியாதை கொடுத்தாலும், நிதி மட்டும் கொடுக்கவே மாட்டோம் என்கிற அவர்களின் நிலைப்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறோம். இந்தியாவில் வேலைவாய்ப்பைப் பெருக்க-பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த-மக்களின் வாங்கும் திறனை அதிகரிக்க எந்த திட்டங்களையும் அறிவிக்காமல், 2047ல் இந்தியாவை வல்லரசு ஆக்குவோம் என்று மீண்டும் ஒருமுறை அல்வா கிண்டியுள்ளார்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்தியா வல்லரசாவதற்கான இலக்கை தள்ளி வைத்துக் கொண்டே போவது மட்டும் தான் பாசிஸ்ட்டுகளின் சாதனை. இடைக்கால பட்ஜெட்டில் கைவிரித்த பாசிஸ்ட்டுகளை, இனி எக்காலத்துக்கும் எழ முடியாத அளவுக்கு இந்திய மக்கள் வீழ்த்துவது உறுதி. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

ஆய்வக உதவியாளர்களுக்கு வேறு பணிகள் வழங்க கூடாது

பள்ளிக்கல்வித்துறை அதிரடி உத்தரவு

சென்னை, பிப்.3: பள்ளிக்கல்வித்துறை செயலாளர் குமரகுருபரன் வெளியிட்டுள்ள அறிக்கை:

பள்ளிக்கல்வித்துறையின் கீழ் இயங்கும் அரசு, நகராட்சி, மாநகராட்சி, உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் 6 முதல் பிளஸ் 2 வரை படிக்கிற மாணவ, மாணவியரின் கற்றல் அடைவுகளை மேம்படுத்தும் வகையில் அடல்டிங்கரின் ஆய்வகம், உயர் தொழில்நுட்ப ஆய்வகம், அறிவியல் ஆய்வகம், மொழி ஆய்வகம், தொழில் கல்வி ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு ஆய்வகப் பணிகளை செய்து வருகின்றனர். மேற்கண்ட பள்ளிகளில் உள்ள ஆய்வகங்களின் உதவியாளர்கள் ஆய்வக பராமரிப்பு மற்றும் செயல்பாடுகளில் மட்டுமே முழுக்கவனம் செலுத்தும் வகையில் ஆய்வகப் பணிகளை மட்டுமே ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

வருகிற 13ம் தேதி சென்னை வருகிறார்

முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் மல்லிகார்ஜுன கார்கே சந்திப்பு

சென்னை, பிப்.3: நாடாளுமன்ற தேர்தல் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்த வரும் 13ல் சென்னை வரும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து பேசுகிறார். அப்போது, இரு கட்சிகளுக்கு இடையேயான தொகுதி பங்கீடு இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்ற தேர்தல் அலை நாடு முழுவதும் வீசத் தொடங்கி உள்ளது. தேர்தல் தேதி அறிவிக்கப்படாத நிலையிலும் அரசியல் கட்சிகள் கூட்டணி மற்றும் தேர்தல் வியூகங்கள் வகுப்பதில் மும்முரம் காட்டி வருகின்றன. இந்த சூழ்நிலையில், ஒன்றிய பாஜ ஆட்சியை வீழ்த்தும் வகையில் நாடு முழுவதும் உள்ள 25க்கும் மேற்பட்ட எதிர்கட்சிகள் ஒருங்கிணைந்து இந்தியா என்ற கூட்டணியை உருவாக்கி தங்கள் ஆதரவை பெருக்கி வருகின்றன.

தொகுதி பங்கீடு இறுதி செய்ய முடிவு

இந்த கூட்டணி சார்பில் அதன் தலைவராக காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு அனைத்து மாநில காங்கிரஸ் கட்சியினருடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வருகிறார். அதை தொடர்ந்து, இன்று முதல் டெல்லி, கேரளா, இமாச்சலபிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள காங்கிரஸ் கட்சியினருடன் தொடர்ச்சியாக ஆலோசனை நடத்துகிறார்.

அதை தொடர்ந்து, வரும் 13ம் தேதி தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளுடன், அவர் நாடாளுமன்ற தேர்தல் குறித்து ஆலோசனை நடத்துகிறார். எனவே, அன்றைய தினம் மல்லிகார்ஜுன கார்கே சென்னை வருகிறார். இதற்கிடையே, தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலை யொட்டி திமுக கூட்டணியில் தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை தொடங்கி உள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக-காங்கிரஸ் இடையே முதல் கட்ட பேச்சுவார்த்தை சில நாட்களுக்கு முன் நடந்தது. அடுத்தக்கட்ட பேச்சுவார்த்தை வரும் 9ம் தேதி நடைபெறும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி தெரிவித்தார். அப்போது காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை இறுதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், சென்னை வரும் மல்லிகார்ஜுன கார்கே, முதல்வர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து பேச உள்ளார். அப்போது, நாடாளுமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் காங்கிரசின் தொகுதி பங்கீடு உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடத்துகிறார். மேலும் இரு கட்சித் தலைவர்கள் சந்திப்பின் போது காங்கிரஸ் கட்சிக்கு எத்தனை தொகுதிகள், எந்தெந்த தொகுதிகள் என்பது இறுதி செய்யப்பட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே மல்லிகார்ஜுன கார்கே வரும் தமிழக அரசியல் வட்டாரத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

வேலூர், அரக்கோணம் உள்ளிட்ட 4 எம்பி தொகுதி

திமுக நிர்வாகிகளுடன் தேர்தல் ஒருங்கிணைப்பு குழு சந்திப்பு

இந்திய அளவில் விடியல் தர பணியாற்ற அறிவுரை

சென்னை, பிப்.3: வேலூர், அரக்கோணம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி நிர்வாகிகளுடன் திமுக தேர்தல் ஒருங்கிணைப்பு குழு நேற்று ஆலோசனை நடத்தியது.

திமுக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக்குழு தொகுதி வாரியான நிர்வாகிகள் சந்திப்பை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடத்தி வருகிறது. இந்நிலையில், 8வது நாளாக நேற்று காலையில் வேலூர், அரக்கோணம் தொகுதிக்கான நிர்வாகிகள் சந்திப்பு நடந்தது. குழுவை சேர்ந்த அமைச்சர்கள் கே.என். நேரு, எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் ஆலோசனை நடத்தினர்.

இந்த சந்திப்பில் வேலூர், அரக்கோணம், மக்களவை தொகுதிக்குள் வருகிற மாவட்டங்களின் அமைச்சர்கள்- மாவட்ட செயலாளர்கள்-ஒன்றிய-நகர-பேரூர் கழக நிர்வாகிகள்-மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

அவர்களுடன் தேர்தல் முன்னேற்பாடு பணிகள்-தொகுதியில் நிலவும் சூழல்-தேர்தலுக்கு திமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை தயார்படுத்துவது உள்ளிட்டவை குறித்து குழுவினர் விரிவாக கருத்துகளை கேட்டறிந்தனர். 2021ல் தமிழ்நாட்டில் விடியலைத் தந்தது போல, 2024ல் இந்திய அளவிலும் விடியலைத் தர வேண்டும் என்ற லட்சியதோடு ஒற்றுமையோடு பணியாற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். அரக்கோணம் மக்களவை தொகுதிக்கு உட்பட்ட நிர்வாகிகளுடன் சந்திப்பின் போது, ஜனநாயகப் போரின் முக்கிய கட்டத்தில் இருக்கும் நாம் அனைவரும் இந்தியா கூட்டணியின் வெற்றிக்கு, இரவு-பகல் பாராமல் பாடுபட வேண்டும் என குழுவினர் கேட்டுக்கொண்டனர். மாலையில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதிகளுக்கான நிர்வாகிகளுடன் சந்திப்பு நடந்தது.

5 நாட்களாக பூட்டி கிடக்கும் ஊராட்சி அலுவலகம்

100 நாள் வேலை திட்டத்தில் முறைகேடு

மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

▶ ஆரணி அடுத்த பனையூர் ஊராட்சியில் 5 நாட்களாக பூட்டிக்கிடக்கும் ஊராட்சிமன்ற அலுவலகம்.

ஆரணி, பிப்.3: திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஊராட்சி ஒன்றியம் பனையூர் ஊராட்சியில் 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த கிராமங்களில் வசிக்கும் பொது மக்களுக்கு ஊராட்சி சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் 1800 பேருக்கு, 100 நாள் வேலைத்திட்ட அட்டை வழங்கப்பட்டு பணி செய்து வருகின்றனர்.

இந்நிலையில், தினமும் பலர் வேலைக்கு வராமலேயே வேலைக்கு வந்தது போல் கணக்கு காட்டுவதாக புகார்கள் எழுந்துள்ளது. இதையடுத்து ஊராட்சி அதிகாரிகள் நேரில் சென்று 100 நாள் வேலை திட்ட பணியாளர்களை கணக்கீடு செய்துள்ளனர். அப்போது குறைவான பணியாளர்கள் வேலையில் இருப்பதும், ஆனால், வருகை பதிவேட்டில் பணியாளர்கள் அதிகமாக குறிப்பிட்டு முறைகேடு செய்திருப்பதும் தெரியவந்துள்ளது. இதனால், அதிகாரிகள் உடனே பணிதள பொறுப்பாளரை அழைத்து கண்டித்துள்ளனர்.

100 நாள் வேலை திட்ட முறைகேடு தொடர்பாக சம்மந்தப்பட்ட ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்திற்கிடையே கடந்த 5 நாட்களுக்கு மேலாக ஊராட்சி மன்ற அலுவலகம் திறக்காமல் உள்ளதால், மக்கள் தங்கள் பகுதியில் உள்ள அடிப்படை பிரச்சனைகள் குறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் தெரிவிக்க முடியாமல் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே 100 நாள் வேலைதிட்ட முறைகேடு தொடர்பாக உடனடி நடவடிக்கை எடுத்து, பூட்டிக்கிடக்கும் ஊராட்சி மன்ற அலுவலக்தை திறந்து மக்கள் பிரச்னைகளை சரி செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குரூப் 2 பதவிக்கு

வரும் 12ம் தேதி முதல் நேர்முக தேர்வு

டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு



சென்னை, பிப்.3: குரூப் 2 பதவிக்கு வரும் 12ம் தேதி முதல் நேர்முக தேர்வு நடைபெறும் என்று டிஎன்பிஎஸ்சி அறிவித்துள்ளது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்(டிஎன்பிஎஸ்சி) தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர் அஜய் யாதவ் வெளியிட்ட அறிவிப்பு:

குரூப் 2 பதவியில் அடங்கிய பதவிகளுக்கு கடந்த 25.3.2023 அன்று முதன்மை எழுத்து தேர்வு நடைபெற்றது. முதன்மை எழுத்து தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண் மற்றும் அத்தெரிவிற்கான வெளியிடப்பட்ட பிற விதிகளின் அடிப்படையில் நேர்முக தேர்வுக்கு தற்காலிகமாக 327 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தற்காலிகமாக அனுமதிக்கப்பட்ட தேர்வர்களின் பதிவெண் கொண்ட பட்டியல் மற்றும் இருவழி தொடர்பு முறையில் மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை தேர்வாணைய இணையதளமான www.tnpsc.gov.in ல் வெளியிடப்பட்டுள்ளது. இவர்களுக்கான நேர்முக தேர்வு வருகிற 12ம் தேதி முதல் 17ம் தேதி வரை நடைபெறும். இதே போல தமிழ்நாடு மருத்துவ சார்நிலை பணியில் அடங்கிய மருத்துவ சோதனை ஆய்வகக் கூடத்தில் இளநிலை பகுப்பாய்வாளர் பதவிக்கான தேர்வு 5.12.23 அன்று நடைபெற்றது. இதில் 126 பேரின் இருவழி தொடர்பு முறையில் மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கூட்டுறவு துறையில் கருணை அடிப்படையில்

26 பேருக்கு பணி நியமன ஆணை

அமைச்சர் பெரியகருப்பன் வழங்கினார்

சென்னை, பிப். 3: கூட்டுறவு துறையின் சார்பில் 26 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வழங்கினார்.

கூட்டுறவு துறையில் பல்வேறு பதவிகளில் பணிபுரிந்து இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தகுதி பெற்ற 26 பேருக்கு தமிழ்நாடு அமைச்சுப் பணிகளின் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் சென்னை, தலைமை செயலகத்தில் நேற்று வழங்கி பேசியதாவது:

கூட்டுறவு துறையில் கடந்த காலங்களில் பணிக்காலங்களில் இயற்கை எய்தியவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவு அளிக்கிற வகையில் அவர்களது வாரிசுதாரர்களுக்கு கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணி வழங்குவது என முடிவெடுத்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் கரங்களால் பணிநியமன ஆணை வழங்கப்பட இருந்தது. ஆனால், வெளிநாட்டு பயணம், நிதி நிலைக் கூட்டம், சட்டமன்ற தொடர் கூட்டம் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலுக்கான அறிவிப்பு வரலாம் என்ற சூழ்நிலையில் தான் முதல்வர், அந்தந்த துறைகளில் இருக்கக்கூடிய பணிகளை முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டார். அதன் அடிப்படையில், இந்த 26 குடும்பங்களின் வாரிசுதாரர்களுக்கு அவர்களுடைய கல்வித்தகுதிக்கு ஏற்றவாறு பணி நியமன ஆணை வழங்கப்படுகிறது. இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை செயலாளர் கே.கோபால், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் என். சுப்பையன் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

விலை உயர்வால் ரேஷனில் அரிசி தட்டுப்பாடு இல்லை

அமைச்சர் பெரியகருப்பன் நிருபர்களிடம் கூறியதாவது:அரிசி விலை உயர்வால் ரேஷன் கடைகளில் அரிசி தட்டுப்பாடு இல்லை. போதிய அளவு அரிசி கையிருப்பு உள்ளது. தலைநகரம் தொடங்கி கிராமம் வரை கூட்டுறவு சங்கத்தின் வங்கிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு துறையில் சிறப்பாக செயல்படும் மாநிலங்களில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. கூட்டுறவு துறையின் சார்பில் விவசாயிகளுக்கு வட்டி இல்லா விவசாய கடன் வழங்கப்படுகிறது. தேர்தல் அறிக்கையில் கூறியபடி விவசாய கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ₹20 ஆயிரம் கோடி அளவுக்கு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த நிதியாண்டில் 13,500 கோடி பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டு 16 ஆயிரம் கோடி பயிர் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டரை ஆண்டு காலத்தில் 9 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. அரிசி விலை உயர்வால் ரேஷன் கடைகளில் எந்த தட்டுப்பாடு இல்லை. போதிய அளவில் அரிசி இருப்பு உள்ளது இவ்வாறு அவர் கூறினார்.

பிபிஏ, பிசிஏ ஆகிய படிப்பு தொடங்க

ஏஐசிடிஇ ஒப்புதல் எதிர்த்து கலைக் கல்லூரிகள் வழக்கு

5ம் தேதி ஐகோர்ட் இடைக்கால உத்தரவு

சென்னை, பிப். 3: உயர் கல்வித்துறையில் கலை, அறிவியல் சார்ந்த கல்வி நிறுவனங்களை யு.ஜி.சி. எனப்படும் பல்கலை மானியக் குழுவும், பொறியியல் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களை ஏஐசிடிஇ எனப்படும் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் அமைப்பும் கட்டுப்படுத்துகிறது.

பி.பி.ஏ., பி.சி.ஏ., ஆகிய படிப்புகளை புதிதாக தொடங்கவும், தற்போது நடத்திவரும் கலை அறிவியல் கல்லூரிகளும் ஏஐசிடிஇயிடம் ஒப்புதல் பெற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து தமிழ்நாடு தனியார் சுயநிதி கலை அறிவியல் மேலாண்மை கல்லூரிகள் நல சங்கம் சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஏஐசிடிஇ அறிவிப்பை ரத்து செய்ய வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது. இந்த வழக்கு நீதிபதி அனிதா சுமந்த் முன்பு விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சங்கம் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் சோமையாஜி, ஜி.சங்கரன் ஆகியோர் ஆஜராகி, ஏஐசிடிஇ வரம்பிற்குள் இந்த படிப்புகளை கொண்டு வர அதிகாரம் இல்லை. உரிய சட்ட திருத்தம் இல்லாமல் இந்த அதிகாரத்தை மேற்கொள்ள முடியாது. இதனால். ஆசிரியர்களுக்கும் வேலை வாய்ப்பில் பாதிப்பு ஏற்படும் என்று வாதிட்டனர். இதையடுத்து, இந்த வழக்கில் இடைக்கால உத்தரவு பிறப்பிப்பது தொடர்பாக 5ம் தேதி முடிவு செய்யப்படும் என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

கிரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)

பதிவு அலுவலகம்: 602, 6 ஆவது தளம், ஸ்ரீரா ஒன் ஜடி பார்க், எஸ்.ஆர்.எண்.79/1, கோர்பாடி, முந்த்வா ரோடு, புனே–411036
கிளை அலுவலகம் அலகு: 2வது தளம், ஆர்ஜே பிளாசா, எண்.5, காட்பாடி பிரதான வீதி, பாலாறு பாலம் அருகில், விருதாம்பேட்டை, வேலூர்

மின்-ஏலம்-விற்பனை அறிவிப்பு
சர்ஃபாஸி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்துகளுக்கான விற்பனை

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (சட்டம்) இன் விதி 8 விதிமுறை மற்றும் விதி 9 விதிமுறையுடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், 2002 கீழ் அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

இதன்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாக மேலும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்)க்கு குறிப்பிட்டு வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ள அசையாச் சொத்துகளை (கடனீட்டுச் சொத்துகள்) கடனீட்டு/விதிக்கப்பட்ட கடனீட்டு கடனீந்தோரான கிரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் கிரிஹும் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று அறியப்பட்டு முதலில் ஜீஇ மணி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (சட்டத்தின்படி இதற்கு பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) கடனீட்டுச் சொத்து உரிமை விதிகள் 8 மற்றும் 9 உடன் சட்டத்தின் பிரிவு 13 இன் உட–பிரிவு (12) கீழ் கடனீட்டு கடனீந்தோரின் அதிகாரப்பூர்வ அதிகாரி தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி (அமலாக்கம்) பிரிவு 13(2) இன் கீழ் சொத்தினை சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் 07.03.2024 அன்று "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு" மேலும் "உள்ளது எதுவோ அது" அடிப்படையில் மின்–ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது மின் ஏலமானது https://www.bankeauctions.com இணையதளம் மூலம் நடத்தப்படும். மேலும் விரிவான விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் குறித்து அறிய ஜிஎச்எப்எல் அல்லது கடனீட்டு கடனீந்தோரின் www.grihumhousing.com இணையதளத்தை பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் நிலுவைத் தொகை (B)	சுவாதீனம் தன்மை (C)	அடமானச் சொத்துகள் விவரம் (D)	நிர்ணய விலை (RP) (E)	முன்வைப்புத்தொகை (நிர்ணய விலையின் 10%) (F)	ஏலப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் (G)	ஏலம் உயர்த்தும் விகிதம் (H)	பார்வையிடும் நாள் & நேரம் (I)	ஏலத்துக்கான நாள் & நேரம் (J)	தெரிந்த விலைமங்கல்கள்/ நிதிமன்ற வழக்கு ஏதேனுமிருந்தால், (K)
1.	கடன் எண். HM/0111/H/17/100474 ஏழுமலை மனோகரன் (கடன்தாரர்), E வசந்தி (உப கடன்தாரர்)	அறிவிப்பு தேதி: 15.11.2021 ரூ.10,19,055/– (ரூபாய் பத்து இலட்சத்து பத்தொன்பதாயிரத்து ஐம்பத்து ஐந்து மட்டும்) மேலும் 15.11.2021 லிருந்து பட்டுவாடா செய்யப்படும் நாள் வரை ஆண்டுக்கு 13.50% வட்டியுடன்	(கையக)	அடமானச் சொத்துகளின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும் பழைய S.F.எண்.15/1, 15/2 இன்படி மனை எண்.121 ஆனது லலபமாங்குப்பம் கிராமம், குப்புசாமி கவுண்டர் நகரம்புர் தாலுகா, வேலூர், வேலூர் மாவட்டம் 635 805 இடத்தில் அமைந்துள்ளது.	ரூ. 19,26,094/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து தொன்னூற்று நான்கு மட்டும்)	ரூ.1,92,609.04/– (ரூபாய் ஒரு இலட்சத்து தொன்னூற்று இரண்டாயிரத்து அறுநூற்று ஒன்பது மற்றும் பைசா நான்கு மட்டும்)	06.03.2024 மாலை 5.00 மணிக்கு முன்னதாக	ரூ.10,000/–	29.02.2024 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி	07.03.2024 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி	இல்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுறு வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்ட விற்கவிதுமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: **மனை எண்.63, 3 ஆவது தளம், சுர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, த